[1975 நவம்பர் 10

*254 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், காவேரிப்பாக்கம் குடிநீர்த் திட்ட வேலை எப்போது துவங்கப்படும்?

(இ) இந்தத் திட்டத்தினால் பயன்பெறும் ஊர்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) வடாற்காடு மாவட்டம் காவேரிப்பாக்கம் குடிநீர்த் திட்ட வேலைகள் 1971 ஆம் ஆண்டு மே மாதம் துவங்கப்பட்டன. திட்ட வேலைகள் யாவும் முடிக்கப்பெற்று 1—8—1974 அன்று பஞ்சாயத்து வசம் ஒப்படைக்கப்பட்டது.

(இ) இந்தத் திட்டத்தினால் (1) அத்திப்பட்டு, (2) திருப்பாற் கடல், (3) ராமாபுரம் ஆகிய ஊர்கள் பயன் பெற்றுள்ளன.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இந்த காவேரிப்பாக்கம் குடிநீர்த் திட்டத்தில் மூன்று கிராமங்கள்தான் இணைக்கப் பட்டிருக்கின்றன. அந்த ஒன்றியத்திலே ஏறக்குறைய 20 கிராமங்களுக்குக் குடிநீர் வசதி வேண்டுமென்று குடிநீர் வடிகால் வாரியத்திற்கும், அரசாங்கத்திற்கும் கூட அந்த ஒன்றியத் தலைவர் விண்ணப்பம் அளித்துள்ளார். அரசாங்கத்திடம் நிதி இல்லை. ஒன்றியத்திடம் 11 இலட்சம் ரூபாய் பொது நிதியாக இருக்கிறது. அந்தப் பொது நிதியிலேயிருந்து பணம் எடுக்கக் கூடாது என்ற முறை இருப்பதால் அதிலிருந்து எடுத்து நிறைவேற்ற முடியாது. எனவே, மாண்புமிகு முதலமைச்சரவர்களும், நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களும் கலந்து எங்கெங்கே ஒன்றியங்களிலே பொது நிதி இருக்கிறதோ, அதையெடுத்து அவர்கள் குடிநீர்த் திட்டத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற ஏற்பாட்டைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்த மூன்று கிராமங்களுக்கும் இணைக்கப்படவே 10 இலட்சம் ரூபாய் செலவாகி இருக்கிறது. ஒன்றியத்திலே 20 கிராமங்கள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். 11 இலட்சம் ரூபாய் ஒன்றியத்திடம் இருக்கிறது என்றால் மீதம் 40 இலட்சம் ரூபாயை

1975 நவம்பர் 10] [மாண்புமிகு திரு. க. அன்பழகன்]

அந்த ஒன்றியத்தால் எங்கிருந்து பெற்றுத்தர முடியும்? ஒன்றியத்தின் பெயரால் கடன் வழங்க மேற்கொள்ளப் பட்டிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. பேரூராட்சியின் பெயரால் கடன் வழங்கினால், பேரூராட்சிகளும், ஊராட்சிகளும் அதைத் திருப்பிக் கட்டுவதற்கான வாய்ப்பு இருக்க வேண்டும். இல்லையென்றால் தற்காலிகமாகக் குடிநீர்க் குழாய்களை ஆங்காங்கே போட்டுக் கொள்ளலாம்.

பொறியியல் பகுதிநேர பட்டப் படிப்பு

* 246 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொறியியல் (B.E.) பட்டப் படிப்பு வகுப்புகளில் 1974–75 ஆம் கல்வி ஆண்டில் பகுதி நேரப் படிப்புக்காக எத்தனை மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்?

(இ) அதில் தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) 392 பேர்கள்.

(இ) 26 பேர்கள்.

[முற்பகல் 9.30]

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: பகுதி நேர பி.இ. கோர்சுக்கு மாணவர்களைச் சேர்க்க உள்ள விதி முறைகள் என்ன? தாழ்த்தப் பட்ட மாணவர்கள், பின்தங்கிய மாணவர்கள் போதிய அளவுக்கு வரவில்லை என்பது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: முழு நேரப் பொறியியற் கல்லூரியில் எந்த விகிதாசார அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்களோ அதே விகிதாசார அடிப்படையில்தான் பகுதி நேரப் படிப்புக்கும் சேர்க்கப் படுகிறார்கள். தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு 18 சதவிகிதம், பிற்பட்ட மாணவர்களுக்கு 31 சதவிகிதம், மற்றைய பிற வகுப்பினர்கள் எல்லோருக்கும் சேர்த்துப் பொதுவாக 51 சத விகிதம் என்ற அந்த விகிதத்தின் அடிப்படையில்தான் சேர்க்கப் படுகிறார்கள். 1974–75 ஆம் ஆண்டில் சேர்ந்த 392 பேரில் பிற்பட்ட வகுப்பினர் 198 பேர்; தாழ்த்தப்பட்டவர்கள் 26 பேர்; பிற வகுப்பினர் எல்லோரும் சேர்ந்து 168 பேர். ஆக,